

பாதுகாப்பாக இருங்கள்

# மின்-வணிக மோசடிகள்

இணையம் வழியாகப் பொருட்களை வாங்கும் தளங்களில் வழக்கமாக நிகழும் மோசடி.



## இது எப்படி நிகழ்கிறது?




- மோசடி செய்பவர்கள் சமீபத்திய சாதனங்கள், வரையறுக்கப்பட்ட பதிப்பு எனக் கூறி வெளியிடப்படும் வணிகப் பொருட்கள் அல்லது இசை நிகழ்ச்சிக்கான நுழைவுச்சீட்டுகள் ஆகியவற்றுக்கு சிறந்த விலைகளை வழங்கி இணையம் வழியாகப் பொருட்கள் வாங்குபவர்களைத் தூண்டக்கூடும்.
- மோசடி செய்பவர்கள் இணையவழி விற்கப்படும் பொருட்களுக்காக வாங்குபவர்களிடம் முன்பணத்தைக் கேட்டுப் பெற்று, பின்னர் பொருட்களை வழங்கத் தவறிவிடுகிறார்கள்.
- சில நிகழ்வுகளில், வாங்குபவர்கள் பணம் செலுத்திய பிறகு கூடுதல் கட்டணங்களைச் செலுத்துமாறும் அவர்கள் கேட்கலாம் (எ.கா. சலுகையைத் தக்கவைத்துக்கொள்ளக் கூடுதல் கட்டணம் அல்லது மறைக்கப்பட்ட ஒப்படைப்புச் செலவுகள்).
- கோவிட்-19 கிருமித்தொற்றுக் காலத்தில், மோசடி செய்பவர்கள் முகக் கவசங்கள் மற்றும் கைகளைச் சுத்தம் செய்வதற்கான கிருமிநாசினிகள் போன்ற பொருட்களை மட்டுமலலாது, விளையாட்டுச் சாதனங்கள் மற்றும் பிற வீட்டு பொழுதுபோக்குத் தயாரிப்புகள் அல்லது வீட்டை அடிப்படையாகக் கொண்ட கற்றலுக்கான மடிக்கணினிகள் (லேப்டாப்கள்) மற்றும் கைக்கணினிகள் (டேப்லெட்டுகள்) ஆகியவற்றையும் சலுகை விலையில் வழங்கி மக்களை ஈர்க்கின்றனர்.

## நான் எதற்காக இதைத் தெரிந்துகொள்ள வேண்டும்?




சிங்கப்பூரில் புகாரளிக்கப்பட்டுள்ள மின்-வணிக மோசடிகள் (த ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ், 2019)

- சிங்கப்பூரில் மின்-வணிக மோசடிகளின் எண்ணிக்கை 2018 முதல் 2019 வரை 1,013 -இல் இருந்து 1,435 ஆக உயர்ந்தது. இதுவே சிங்கப்பூரில் நிகழும் மிகவும் பொதுவான வகை மோசடி ஆகும்.
- இந்த மோசடிகள் பல பிரபலமான இணையம் வழியாகப் பொருட்களை வாங்கும் தளங்களான கரோசெல் (Carousell), ஷாப்பி (Shopee) மற்றும் லாசாடா (Lazada) போன்றவற்றில் நிகழ்கின்றன. இத்தகைய மோசடிகள் மின்னணுப் பொருட்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளுக்கான நுழைவுச்சீட்டுகள் ஆகியவற்றின் விற்பனையில் ஈடுபடுகின்றன.
- கோவிட்-19 கிருமித்தொற்று பரவலின் போது, மோசடி செய்பவர்கள் மக்களின் அச்சத்தைப் பயன்படுத்தி முகக் கவசங்களை விற்பனை செய்வதாகப் போலியாக விளம்பரம் செய்து வாடிக்கையாளர்களை ஏமாற்றியுள்ளனர், மேலும் வாடிக்கையாளர்கள் வங்கிப் பரிவர்த்தனை வழியாக முன்பணம் செலுத்திய பிறகு அவர்களைத் தொடர்புகொள்ள முடியாமல் போனது.

#பாதுகாப்பாக இருங்கள்

கிளிக் செய்வதற்கு முன்னர் சரிபார்க்கவும்


1 CLICK AWAY
Be Safe · Be Smart · Be Kind

MEDIA LITERACY COUNCIL

ஆதரவளித்தவர்:
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY
SINGAPORE POLICE FORCE
NATIONAL CRIME PREVENTION COUNCIL
SINDA Singapore Indian Development Association

இவரது ஆதரவுடன்:
SG:D | GET READY!

# மின் -வணிக மோசடிகளில் இருந்து என்னை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது?



## இணையம் வழியாகப் பொருட்களை வாங்கும் போது உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்வதற்கான சில வழிகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன!

- தங்கள் பொருட்களை அனைவரும் நம்பக்கூடிய வகையில் குறைந்த விலையில் விற்பனை செய்வதாக விளம்பரம் செய்யும் விற்பனையாளர்களிடமிருந்து எச்சரிக்கையாக இருங்கள்.
- மேலும், ஏராளமான இலவசப் பொருட்கள் வழங்குவதாக விளம்பரம் செய்யப்பட்டால் கவனமாக இருங்கள்.







- மின்-வணிகத் தளம் எவ்வாறு தனது வாடிக்கையாளர்களின் நலன்களைப் பாதுகாக்கிறது மற்றும் சர்ச்சைகளைத் தீர்க்க உதவுகிறது என்பதைக் கண்டறியவும். PayNow, PayPal, Mastercard அல்லது VISA போன்ற அங்கீகாரம் பெற்ற இணையவழிக் கட்டணம் செலுத்தும் தளத்தை வணிகர் பயன்படுத்துகிறார் என்பதை உறுதிசெய்து கொள்ளவும்.

- வாங்குபவர் பொருட்களைப் பெற்ற பிறகு மட்டுமே விற்பனையாளருக்குப் பணத்தை விடுவிக்கும் வசதியை வழங்கும் நம்பகமான தளங்களில் பரிவர்த்தனை செய்யுங்கள்.
- சாத்தியப்படும் இடத்தில், பொருட்கள் ஒப்படைக்கப்பட்ட பிறகு பணம் செலுத்தும் முறையைத் தேர்வு செய்யுங்கள். குறிப்பாக, இணையவழி விளம்பரங்கள் அல்லது மின்-சந்தைவெளி விளம்பரங்கள் மூலம் நீங்கள் பரிவர்த்தனை செய்கிறீர்கள் என்றால் இது மிகவும் முக்கியமானது. நேரில் சந்திப்பது சாத்தியமில்லை என்றால், குறிப்பாக அதிக மதிப்புள்ள பொருட்கள் என்றால், நீங்கள் கவனமாகப் பரிசீலிக்க வேண்டியது அவசியமாகும்.





#பாதுகாப்பாக இருங்கள்

கிளிக் செய்வதற்கு முன்னர் சரிபார்க்கவும்


1 CLICK AWAY
Be Safe · Be Smart · Be Kind
MEDIA LITERACY COUNCIL
ஆதரவளித்தவர்:
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY
SINGAPORE POLICE FORCE
NATIONAL CRIME PREVENTION COUNCIL
SINDA Singapore Indian Development Association
இவரது ஆதரவுடன்:
SG:D | GET READY!

# இணையம் வழியாகப் பொருட்களை வாங்கும் போது உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்வதற்கான சில வழிகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன!




- குறிப்பாக அதிக மதிப்புள்ள பொருட்களை நன்கு அறிமுகமான அல்லது புகழ்பெற்ற இணையவழி விற்பனையாளர்களிடமிருந்து வாங்கவும்.
- நீங்கள் ஒரு வணிகரிடமிருந்து முதல் முறையாக வாங்குகிறீர்கள் என்றால், அதிக மதிப்புள்ள பொருட்கள் வாங்குவதைத் தவிர்க்கவும்.
- அந்த வணிகர் சிங்கப்பூர் பயனீட்டாளர் சங்கத்தின் (CASE) நிறுவன எச்சரிக்கைப் பட்டியலில் உள்ளாரா என்று சரிபார்க்கவும் – www.case.org.sg/consumeralertlist.aspx .அந்த வணிகர் பட்டியலில் இருந்தால், அவரிடமிருந்து வாங்குவதைத் தவிர்க்கவும்.

- இணையவழி விற்பனையாளரைப் பற்றிய சுதந்தரமான மீளாய்வுகளையும், தயாரிப்புகளின் நம்பகத்தன்மை, தரம் மற்றும் ஒப்படைப்பு மற்றும் விற்பனைக்குப் பிந்தைய சேவை பற்றிய கடந்தகால வாடிக்கையாளர்களின் கருத்துகளையும் வாசிக்கவும். எனினும், மீளாய்வுகளும் கூட போலியாக இருக்கலாம் என்பதை நினைவில் கொள்க. நல்ல மதிப்பீடுகளைக் கொண்டிருக்கும் விற்பனையாளர்களின் கணக்குகளை மோசடி செய்பவர்கள் வாங்கி, தங்கள் மோசடிகளை மேற்கொள்ளலாம்.






- மோசடி செய்பவர்கள் தங்கள் நம்பகத்தன்மையை அதிகரிப்பதற்காக உள்ளூர் வங்கிக் கணக்குகளை அல்லது திருடப்பட்ட அடையாள அட்டையின் படங்களை வழங்கக்கூடும், எனவே அத்தகவல்களை நம்பகத்தன்மையின் சான்றாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

#பாதுகாப்பாக இருங்கள்

**கிளிக் செய்வதற்கு முன்னர் சரிபார்க்கவும்**

1 CLICK AWAY
MEDIA LITERACY COUNCIL
ஆதரவளித்தவர்:
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY
SINGAPORE POLICE FORCE
NATIONAL CRIME PREVENTION COUNCIL
SINDA
இவரது ஆதரவுடன்:
SG:D | GET READY!